# தமிழ்நாடு சட்டக் கல்வி இயக்ககம்

## சென்னை

மற்றும்

## அரசு சட்டக் கல்லூரி, தேனி

இணைந்து நடத்தும்

# மாநில அளவிலான தமிழ்
# மாதிரி நீதிமன்ற போட்டி - 2024



**நேரம்:** காலை 10 மணி முதல்

**இடம்:** அரசு சட்டக் கல்லூரி, தேனி

**தேதி:** 15 பிப்ரவரி 2024 முதல் 17 பிப்ரவரி 2024 வரை.

# மாநில அளவிலான தமிழ் மாதிரி நீதிமன்ற போட்டி – 2024

## அழைப்பு

**அன்புடையீர்,**

சட்டக்கல்வி இயக்குநரகத்தின் வழிகாட்டுதலின் படி, அரசு சட்டக் கல்லூரி, தேனியில் நடைபெறவிருக்கும் மாநில அளவிலான தமிழ் மாதிரி நீதிமன்ற போட்டி – 2024இல் பங்கேற்க உங்களையும், உங்கள் மதிப்பிற்குரிய நிறுவனத்தையும் அழைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். மாநில அளவிலான தமிழ் மாதிரி நீதிமன்ற போட்டி 15 பிப்ரவரி 2024 முதல் 17 பிப்ரவரி 2024 வரை தேனியில் உள்ள அரசு சட்டக் கல்லூரியில் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த போட்டியானது, தமிழ்நாடு மாநிலம் முழுவதிலும் உள்ள சட்ட மாணவர்களுக்கு அவர்களின் சட்டம் தொடர்பான அறிவினை மேம்படுத்தவும், சட்ட ஆராய்ச்சி திறன் மற்றும் வழக்கு வாத விவாத திறமையை வெளிப்படுத்த ஒரு அடித்தளத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அறிவார்ந்த சமூக வளர்ச்சியை இந்த மாதிரி நீதிமன்ற போட்டி ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல் சமூக பொருளாதார நீதியை மேம்படுத்தவும் முயற்சியை ஊக்குவிக்கவும், பங்கேற்கும் அணிகளுக்கு இடையே ஆரோக்கியமான போட்டியை உருவாக்குவதும் எங்கள் முயற்சியாகும்.

உங்களின் உற்சாகமான பங்கேற்பை எதிர்பார்க்கின்றோம், தேனி அரசு சட்டக்கல்லூரியில் நடைபெறவிருக்கும் மாநில அளவிலான தமிழ் மாதிரி நீதிமன்ற போட்டியில் பங்கேற்க உங்களையும், உங்கள் நிறுவனத்தையும் வரவேற்பதற்கு ஆவலுடன் காத்திருக்கின்றோம். நாம் ஒன்றாக இணைந்து இந்த வழக்கு வாத விவாத போட்டி நிகழ்வை மாபெரும் வெற்றியடையச் செய்வோம்.

உங்கள் பங்கேற்பை உறுதிசெய்ய இதனுடன் இணைக்கப்பட்டுள்ள கூகுள்(Google Form) படிவத்தை நிரப்பி இயங்கலையில் ஒப்படைக்கவும், மேலும் கூடுதல் தகவல்களுக்கு எங்கள் ஒருங்கிணைப்பாளர்களை தயக்கமின்றி தொடர்புகொள்ளவும், அவர்கள் உங்கள் சந்தேகங்களுக்கு முறையான பதிலளிப்பர், ஒருங்கிணைப்பாளர்களின் தொடர்பு எண்கள் பின் இணைப்பில் தரப்பட்டுள்ளன. எங்கள் அழைப்பை பரிசீலித்ததற்கு நன்றி.

இப்படிக்கு

முனைவர். ப. சண்முகப் பிரியா

முதல்வர்(பொ)

அரசு சட்டக்கல்லூரி, தேனி.

# மாநில மாதிரி நீதிமன்றக் குழு

## புரவலர்

**பேரா. முனைவர். J. விஜயலட்சுமி**
சட்டக்கல்வி இயக்குநர்,
சென்னை.

## ஒருங்கிணைப்பாளர்

**பேரா. முனைவர். N. கயல்விழி**
முதல்வர்,
சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி,
பட்டறைப்பெரும்புதூர்.

## துணை ஒருங்கிணைப்பாளர்கள்

**முனைவர். S. துர்கா லட்சுமி**
முதல்வர்(பொ),
அரசு சட்டக்கல்லூரி, சேலம்.

**முனைவர். N. இராமபிரான் ரஞ்சித் சிங்**
முதல்வர்(பொ)
அரசு சட்டக்கல்லூரி, காரைக்குடி.

## உறுப்பினர்கள்

**முனைவர். P. சிவதாஸ்**
முதல்வர் (பொ),
அரசு சட்டக்கல்லூரி,
தருமபுரி.

**திரு. X. இன்பசேகரன்**
உதவிப் பேராசிரியர்,
அரசு சட்டக்கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

**முனைவர். B. முத்துக்குமார்**
உதவிப் பேராசிரியர்,
அரசு சட்டக்கல்லூரி,
இராமநாதபுரம்.

**திருமதி. V. விஜயஸ்ரீ**
உதவிப் பேராசிரியர்,
சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு
சட்டக்கல்லூரி,
பட்டறைப்பெரும்புதூர்.

**திரு. M. பிரனவ் விஷ்ணு அர்ஜன்**
உதவிப் பேராசிரியர்,
அரசு சட்டக்கல்லூரி,
கோயம்புத்தூர்.

**முனைவர். V. ரம்யா**
உதவிப் பேராசிரியர்,
அரசு சட்டக்கல்லூரி,
வேலூர்.

## சட்டக்கல்வி இயக்ககத்தைப் பற்றி:

சட்டப் படிப்புகளுக்கான இயக்குநரகம் 1953 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது, தமிழ்நாட்டில் சட்டப் படிப்புகளுக்கான இயக்குநரகம் சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்துவதில் முக்கியப் பங்காற்றுகிறது. திறமையான நிர்வாகம் மற்றும் அரசு சட்டக் கல்லூரிகளில் சிறந்த கல்விச் சூழலை உருவாக்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது, சட்டப் படிப்புகளுக்கான இயக்குநரகம் சட்டக்கல்வியின் தரத்தை உயர்த்துவதையும் சட்டத் தொழிலின் வளர்ச்சிக்கு பங்களிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## அரசு சட்டக் கல்லூரி, தேனி:

முல்லைப் பெரியாறு அணையின் பூக்காட்டு தேனீக்கள் தேவாரம் இசைக்கும், சுருளி அருவியும், பச்சை அலைகள் பாயும் வீரபாண்டி வயல்வெளிகளும், பனிமேகங்கள் தவழ்ந்து செல்லும் மேகமலைகள் சூழ்ந்த பசுமை பள்ளத்தாக்கும், அறத்தின் வழி நின்று, நீதி கேட்ட கண்ணகி விண்ணுயர்ந்த மண்ணாம், தேனி மண்ணின் மைந்தர்களுக்கு தரமான சட்டக் கல்வியை வழங்கும் நோக்கோடு தமிழக அரசினால், இயற்கை எழில் கொஞ்சும் தேனியில், அரசு சட்டக் கல்லூரியானது 29 ஆகஸ்ட் 2019 ஆம் தேதி முதல் செயல்படத்தொடங்கியது. நம் சட்டக்கல்லூரியில், சட்டக்கல்வியின் திறனை மேம்படுத்தும் விதமாக கல்லூரியுடன் இணைந்த மாதிரி நீதிமன்ற அறை, கருத்தரங்க அறை, காணொலி காட்சி அறை, மாணவ, மாணவியர் விடுதி, நூலகம் மற்றும் கலையரங்கம் என பல சிறப்பம்சங்களுடன் மிகச் சிறப்பாக இயங்கிவருகின்றது.

நமது தேனி அரசு சட்டக் கல்லூரியானது, மாணவர்களுக்கு 5 ஆண்டுகள் ஒருங்கிணைந்த பி.ஏ., எல்.எல்.பி, (B.A., LL.B.) சட்டப்படிப்பினை வழங்குகின்றது மற்றும் 3 ஆண்டுகள் எல்.எல்.பி, (LL.B.) சட்டப்படிப்பினை வழங்குகின்றது. பி.ஏ., எல்.எல்.பி மற்றும் எல்.எல்.பி பாடப் பிரிவுகளில் ஒவ்வொரு வருடத்திலும் 80 மாணவர்களுக்கு மிகாமல் இக்கல்லூரி சேர்க்கையை வழங்குகிறது. இக்கல்லூரியானது, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இக்கல்லூரியானது, இந்திய பார் கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியாகும். தேனியில் மாவட்ட நீதிமன்றம் மற்றும் பிற துணை நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. தேனியின் அருகில் உள்ள மதுரையில் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை செயல்பட்டு வருகிறது. எனவே மாணவர்கள் சட்டக்கல்வியின் நடைமுறை அறிவினைப் பெறவும் வழக்குகளைப் பற்றி அறிந்துகொள்ளவும் இக்கல்லூரி மாணவர்களுக்கு பேருதவிபுரிகின்றது. "முயற்சி திருவினையாக்கும்" என்பது எங்கள் குறிக்கோள். “உயர்தர, நிரந்தர, தனித்துவ சட்டக்கல்வியை மாணவர்களுக்கு அளிப்பதே எங்கள் இலக்கு”. அனைவரின் ஆதரவுடனும் இந்த உயர்தர சட்டக் கல்லூரியை நாட்டின் முதன்மையான சட்ட நிறுவனமாக மாற்ற எங்களின் அயராத முயற்சிகளை தொடர்வோம்.

# மாநில அளவிலான தமிழ் மாதிரி நீதிமன்ற போட்டி – 2024

## மாதிரி நீதிமன்ற முன்மொழிவு

## வழக்கின் பொருண்மைகள்

மருதம் தெற்காசியாவில் உள்ள ஒரு நாடாகும். நெய்தல் என்பது மருதத்தின் வடக்குப் பகுதியில் உள்ள ஒரு மாநிலமாகும். நெய்தலில் பிறந்து வளர்ந்த ராகேஷ், தொழில் ரீதியாக பட்டயக் கணக்காளராக இருந்தார். அவர் மரபுவழி இந்து குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆவார். ராகேஷ் பெற்றோருக்கு ஒரே மகன். அவர் தனது வேலை தொடர்பாக முல்லைக்குச் சென்றார். முல்லையில், அவர் நிஷா என்ற ஒரு மென்பொருள் பொறியாளரைச் சந்தித்தார், அவளும் நெய்தலைச் சேர்ந்தவள். அவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்களாக மாறுகிறார்கள். நாளடைவில் இவர்களது உறவு நெருங்கி, இருவரின் பெற்றோரின் சம்மதத்துடன் 2018 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர். இவர்களது திருமணம் இந்து திருமணச் சட்டம், 1955-ன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

தம்பதியினர் தங்கள் திருமண வாழ்க்கையை மிகவும் மகிழ்ச்சியான முறையில் தொடங்கினர். திருமணம் முடிந்த உடனேயே நிஷாவுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. புதிதாக திருமணம் ஆனதால், ராகேஷ் மற்றும் அவரது பெற்றோர்கள் நிஷா வெளிநாடு செல்வதை விரும்பவில்லை. வெளிநாடு சென்று தொழில் செய்து முன்னேறும் தனது பொன்னான வாய்ப்பை கைவிட நிஷா தயங்கினாலும், குடும்பத்தினரின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து வெளிநாடு செல்லும் வாய்ப்பினை கைவிட்டார். அவர் அந்த வாய்ப்பினை மறுத்தவுடன், அந்த வாய்ப்பானது இளைய சக பணியாளரான ஒருவருக்கு கிடைத்தது. நிஷா அதனை சிந்தித்தே மன உளச்சலுக்கு ஆளானார். இப்பிரச்சினையில் இருந்து விடுபடலாம் என்று நினைத்தாலும், அது அவளை பாதித்தது, இதன் மூலம் இருவரின் உறவில் விரிசல்கள் தோன்ற ஆரம்பித்தன. அன்றாடம் குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் என தோன்றி, தவறான புரிதல்களாக மாறி, பெரிதாகி, பெரிய பிரச்சினையாக மாறியது. இருவரும் தங்கள் வேலையில் முழுக்க கவனமாக இருந்ததால், இருவரும் திருமண வாழ்க்கையை பற்றி கவலைப்படவில்லை, இது அவர்களது திருமண வாழ்க்கையை பாதித்தது. நிஷாவுக்கு வெளிநாடு செல்ல இன்னொரு வாய்ப்பு கிடைத்தது. ராகேஷ் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ஆட்சேபனைகள் இருந்தபோதிலும், நிஷா இந்த வாய்ப்பை இழக்கத் தயாராக இல்லை, மேலும் வெளிநாடு செல்ல முடிவு செய்தார். இதனால் பிரச்சனை மேலும் அதிகரித்தது.

குடும்ப அழுத்தங்களையும் மீறி, நிஷா 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஸ்வீடனுக்குச் சென்றார். தனது கணவர் மற்றும் குடும்பத்தினரிடம் விரைவில் திரும்பி

வருவேன் என்றும், முடிந்தவரை அடிக்கடி மருதத்திற்குத் திரும்புவேன் என்றும் உறுதியளித்தார். கோவிட் 19 பரவியதால் சர்வதேச விமானத்தில் பயணம் செய்வது இயலாத காரியமாக இருந்தது. இந்த சூழ்நிலையில் நிஷாவுக்கு இரண்டு வழிகள் மட்டுமே இருந்தன, ஒன்று, உடனடியாக மருதத்திற்குச் செல்ல வேண்டும், அல்லது வேலையை முழுமையாக முடித்துவிட்டு மருதத்திற்குத் திரும்ப வேண்டும். நிஷா இரண்டாவது வழியை தேர்ந்தெடுத்தார்.

கோவிட் 19 இன் உலகளாவிய பரவல், சர்வதேச விமானப் பயணத்தை மிகவும் கடினமாக மாற்றியது. கோவிட் 19 இன் 1 ஆவது அலையின் போது ராகேஷின் தந்தை கடுமையாக நோய்வாய்ப்பட்டார். தனது பேரக் குழந்தையைப் பார்க்க வேண்டும் என்ற அவரின் விருப்பம் நிறைவேறாத விருப்பமாக இருந்தது. நிஷாவின் நடத்தை குறித்த அதிருப்தியையும், அவள் அவளது திருமண கடமைகளைப் புறக்கணித்து வெளிநாடு சென்றது குறித்து, அவர் தனது கோபத்தை வெளிப்படுத்தினார். இதனையடுத்து கோவிட் 19 இன் 1 ஆவது அலையின் போது ராகேஷின் தந்தை உயிரிழந்தார். கோவிட் 19 இன் 2 ஆவது அலையின் போது ராகேஷ் தனது தாயை இழந்தார். நிஷாவால், கோவிட் 19 இன் இரண்டு அலைகளுக்கு இடையிலும் தனது நாட்டிற்கு திரும்ப முடியவில்லை. இதன் விளைவாக, நிஷாவும், ராகேஷும் இணைய வழியிலேயே சண்டையிட்டுக்கொண்டனர். தொடர் குடும்ப பிரச்சனை காரணமாக ராகேஷ் மது அருந்தத் தொடங்கினார், நிஷா தனது 3 வருட வெளிநாடு தொழில் திட்டத்தை இரண்டரை ஆண்டுகளில் வெற்றிகரமாக முடித்துவிட்டு, 2022 இன் தொடக்கத்தில் தாய்நாடு திரும்பினார். நிஷா தனது நிறுவனத்திடமிருந்து நிறைய பாராட்டுகளைப் பெற்றார், அவருக்கு பதவி உயர்வும் கிடைத்தது. நிஷாவின் வருமானம் உயர்ந்தது. நிஷாவின் வருமானம் ராகேஷின் வருமானத்தை விட அதிகமாக இருந்தது. அதிக வருவாய் இருந்த போதும், அவர்களது திருமண வாழ்க்கை அவ்வளவு சீராக இல்லை.

நிஷா மீது மிகுந்த கோபத்தில் இருந்த ராகேஷ், அவளுடன் நாளுக்கு நாள் சண்டையிட ஆரம்பித்தார், ஆனாலும் உடல் ரீதியான தாக்குதலில் ஈடுபடவில்லை. நிஷாவின் பதவி உயர்வைக் கொண்டாட நிஷாவின் உடன் பணிபுரியும் நண்பர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். அந்த விருந்து நிகழ்வில் ராகேஷ் அதிகமாக மது அருந்திவிட்டு சலசலப்பை ஆரம்பித்தார். நிஷா அவரை வீட்டிற்கு அனுப்ப முயன்றபோது, ராகேஷ் நிஷாவை ஒருமுறை அறைந்துவிட்டு அவள் இல்லாமல் அங்கிருந்து செல்ல மறுத்தார். இதனால் நிஷா தனது திருமண வீட்டை விட்டு வெளியேறி தனது தோழியின் வீட்டில் தங்கினார். தன் தவறை உணர்ந்த ராகேஷ், நிஷாவிடம் சென்று மன்னிப்பு கேட்டு அவளை வீட்டிற்கு வருமாறு கெஞ்சினார். ராகேஷ் செய்த செயல் மூலம், தனது உயர்ந்த

தொழில் பிம்பம், முழுவதுமாக களங்கமடைந்துவிட்டதாக உணர்ந்த நிஷா அவரை மன்னிக்கத் தயாராக இல்லை. டிசம்பர் 2022 இல், தனக்கு நிகழ்ந்த கொடுமையின் அடிப்படையில் ராகேஷை விவாகரத்து செய்யக் கோரி முல்லை குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். தன் மனைவி தன்னை மன்னித்து மீண்டும் தன்னிடம் வருவாள் என்று காத்திருந்த ராகேஷ், திருமண உரிமைகளை மீட்டெடுக்க மனு தாக்கல் செய்தார்.

குடும்பநல நீதிமன்றம் இரு மனுக்களையும் விசாரித்து, இரு தரப்பினரையும் கட்டாய அறிவுரை பகர்தலுடன் கூடிய சமரச மையத்திற்கு அனுப்பிவைத்தது. ஆலோசகர்கள், நிஷாவை சமாதானப்படுத்தி பிரச்சினையை சமரசமாக தீர்க்க முயன்றனர் ஆனால் அவர்களது முற்சிகள் பலனளிக்கவில்லை. ஆலோசகர்கள், தங்கள் முயற்சிகள் பலனளிக்கவில்லை என்ற அறிக்கையை குடும்ப நல நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தனர். அவர்கள் அளித்த அறிக்கையில், இருதரப்புக்கும் இடையேயான திருமணம் காதல் திருமணம் என்றும், தொழில் மற்றும் பணி அழுத்தம் காரணமாக அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் அதிகமாக இருந்ததாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தனர். கணவன் அறைந்த அந்த ஒரு தவறான சம்பவத்தைத் தவிர, இரு தரப்பினரின் மீதும் சிறிய தவறுகள் மட்டுமே இருந்ததாக அந்த அறிக்கை கூறியது. மேலும், போதுமான நேரத்துடன் கூடிய சமரச செயல்முறைகள் மூலம் அவர்களின் திருமணத்தை காப்பாற்ற முடியும் என்றும், அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்து.

சமரசம் செய்பவர்களின் அறிக்கையை ஆராய்ந்த பின்னர், இரு தரப்பினரும் நீதிமன்றத்திற்கு நேரில் வர அழைப்பு விடுக்கப்பட்டது. திருமண உரிமைகளை மீட்டுத் தருமாறு ராகேஷ் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் குடும்பநல நீதிமன்ற நீதிபதி, நிஷாவை ஒரு மாத காலத்திற்கு ராகேஷ் உடன் தனது திருமண வீட்டிற்கு திரும்பிச் சென்று அங்கு வாழ வேண்டும் என்றும், அதற்குள் அவர்களுக்குள் சமரசம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும் என்ற இடைக்கால உத்தரவைப் பிறப்பித்தார். நிஷா குடும்ப நல நீதிமன்ற நீதிபதியின் உத்தரவை முழுவதுமாக ஏற்க மறுத்துவிட்டார். மேலும், உத்தரவைக் கடைப்பிடிக்கத் தவறினால் விவாகரத்து கோரிய அவரது மனு அன்றே தள்ளுபடி செய்யப்படும் என்றும் நீதிபதி எச்சரித்தார். இருப்பினும், அவர்களுக்கு இடையேயான உறவில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்றால் விவாகரத்து மனு பரிசீலிக்கப்படும் என்று நீதிபதி அவரிடம் கூறினார்.

நிஷா, ராகேஷுடன் தங்கியிருக்கும் போது அவளது தனிப்பட்ட உரிமை மற்றும் உடல் பாதுகாப்பு போன்ற உரிமைகள் பாதுகாக்கப்படும் என்ற உத்தரவாதத்தின் பேரில் நிஷா, ராகேஷ் உடன் செல்ல தயக்கத்துடன் ஒப்புக்கொண்டாள். நிஷாவின் தனியுரிமை

மற்றும் உடல் பாதுகாப்பு உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்பதை உறுதி செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் ராகேஷுக்கு தெளிவாக அறிவுறுத்தியது. இடைக்கால உத்தரவால் மிகவும் மகிழ்ச்சியடைந்த ராகேஷ் நீதிமன்றத்தின் நிபந்தனைகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். ஒரு வருடத்திற்கும் அதிகமான காலத்திற்குப் பிறகு தம்பதியினர் தங்கள் திருமண வீட்டிற்கு திரும்பினர்.

திருமண வீட்டில் தங்கிய முதல் சில நாட்கள் எந்த ஒரு அசம்பாவிதமும் இல்லாமல் சென்றது, ஒருவருக்கொருவர் வேலையில் தலையிடவில்லை. இருப்பினும், 7வது நாளில், குடிப்பழக்கத்தின் விளிம்பில் இருந்த ராகேஷ் மது அருந்திவிட்டு வீட்டிற்கு திரும்பினார், ஆனால் அவர் எந்த அசம்பாவிதமும் செய்யாமல் நேராக தனது அறைக்கு சென்றார். ஆனால், 13 ஆம் நாளில் ராகேஷ் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்து தூங்கிக்கொண்டிருந்த நிஷாவை கட்டாயப்படுத்தி, அவளது விருப்பமின்றி பாலியல் பலாத்காரம் செய்தார். இதில் காயம் அடைந்த நிஷா அங்கிருந்து தப்பி ஓடி அக்கம்பக்கத்தினர் உதவியுடன் அருகில் உள்ள மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றார். மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைத்ததும் காவல் துறையினர் மருத்துவமனைக்கு நேரில் வந்து அவளது புகாரை கேட்டறிந்து பதிவு செய்தனர். ஆனால், அவள் அளித்த புகாரின் படி அவளது கணவர் மீது போலீசார் பலாத்கார வழக்கு பதிவு செய்யவில்லை என்பது தெரிய வந்தது. அவர் உங்கள் கணவர் என்பதால் அவர் மீது பலாத்கார வழக்கு எதுவும் பதிவு செய்ய முடியாது என்றும் காவல் துறையினர், தெரிவித்தனர்.

நிஷா தனது கணவர் மீது பலாத்கார வழக்கைப் பதிவு செய்ய உத்தரவிடக் கோரி முல்லை உயர் நீதிமன்றத்தை அணுகினார், கணவன்மார்களுக்கு மருதம் தண்டனைச் சட்டத்தின் 375 வது பிரிவில் வழங்கப்பட்டுள்ள விதிவிலக்கு அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்றும், இந்து திருமணத் சட்டதின் பிரிவு 9 அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்றும் அறிவிக்க வேண்டும் என்றும், மேலும் தனது கணவருடன் திருமண வீட்டிற்கு செல்ல வற்புறுத்திய குடும்ப நீதிமன்ற நீதிபதியை குற்ற உடந்தையராக சேர்க்கவும் வேண்டினார். நிஷாவின் குற்றச்சாட்டை ராகேஷ் ஏற்றுக்கொண்டார், ஆனால் அது குடிபோதையில் நடந்ததாகவும், எந்த வித உள் நோக்கமும் இல்லாமல் நடந்ததாகவும் கூறி மன்னிப்பு கோரினார். இரு தரப்பு மற்றும் அரசு வழக்கறிஞர் வாதத்தை கேட்ட உயர்நீதிமன்றம், ராகேஷ் மீது மருதம் தண்டனைச் சட்டம் 376 (B) பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்ய உத்தரவிட்டு, நிஷாவின் மனுக்களை தள்ளுபடி செய்தது.

இந்த உத்தரவால் பாதிக்கப்பட்ட இரு தரப்பினரும் மருதம் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர், அவர்களின் இரண்டு முறையீடுகளும் உச்ச நீதிமன்றத்தால்

ஏற்றுக்கொள்ளப்பட்டன. உச்ச நீதிமன்றம் இரண்டு மேல்முறையீடுகளையும் இறுதி விசாரணைக்கு ஒத்திவைத்தது. வழக்கில் முடிவெடுப்பதற்காக பின்வரும் வினாக்களை உருவாக்கியது.

**வழக்கெழு வினாக்கள்:**

1) **இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 9 என்பது மருதம் அரசியல் சட்டத்திற்கு விரோதமானதா?**
2) **மருதம் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 375ன் கீழ் கணவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள விதிவிலக்கு இந்திய அரசியல் சட்டத்திற்கு விரோதமானதா?**
3) **ராகேஷ் செய்த செயல் மருதம் தண்டனைச் சட்டத்தின் 376 (B) பிரிவின் கீழ் வருமா?**
4) **குடும்ப நீதிமன்ற நீதிபதியை தற்போதுள்ள சட்டங்களின்படி பொறுப்பாக்க முடியுமா? அல்லது குற்ற உடந்தையராக சேர்க்க முடியுமா?**

**குறிப்பு:**

1) **மருத நாட்டு சட்டங்களும் இந்திய ஒன்றியத்தின் சட்டங்களும் ஒரே மாதிரியானவை.**
2) **மாணவ வழக்கறிஞர்கள் வேறு ஏதேனும் கூடுதல் வினாக்கள் மற்றும் துணை வினாக்களை உருவாக்கலாம்.**

## பொறுப்பு துறப்பு:

**மாதிரி நீதிமன்ற முன்மொழிவு முற்றிலும் கற்பனையானது மற்றும் மாதிரி நீதிமன்ற போட்டிக்காக மட்டுமே வரைவு செய்யப்பட்டது. இந்த மாதிரி நீதிமன்ற முன்மொழிவில் சித்தரிக்கப்பட்டுள்ள தனிநபர்கள், நிறுவனங்கள், மற்றும் நிகழ்வுகள் அனைத்தும் கற்பனையாக உருவாக்கப்பட்டவை. உண்மையான நபர்கள் அல்லது நிகழ்வுகளுடன் பொருந்திப் போனால் அவ்வொற்றுமை முற்றிலும் தற்செயலானது மற்றும் திட்டமிடப்படாதது. மாதிரி நீதிமன்ற முன்மொழிவின் உள்ளடக்கங்கள் எந்தவொரு தனிநபரின்(கள்), நிறுவனம், சமூகம், அமைப்பு அல்லது தனிநபர்களின் வர்க்கத்தின் உணர்வுகளை இழிவுபடுத்தும் / புண்படுத்தும் நோக்கம் கொண்டவை அல்ல.**

## மாநில அளவிலான தமிழ் மாதிரி நீதிமன்ற போட்டி – 2024

# விதிமுறைகள்

## I. வரையறைகள்

1) 'மேம்பட்ட சுற்றுகள்' என்பது போட்டியின் காலிறுதி, அரையிறுதி மற்றும் இறுதி சுற்றுகளைக் குறிக்கும்.

2) 'தெளிவுரை' என்பது மாதிரி நீதிமன்ற போட்டியை நடத்திடும் கல்லூரியால்/ ஒருங்கிணைப்பு குழுவால் மாதிரி நீதிமன்ற போட்டியின் பொருண்மைகளுக்கும் விதிமுறைகளுக்கும் கொடுக்கப்படும் தெளிவுரைகள் மற்றும் திருத்தங்களை குறிக்கும்.

3) 'போட்டி' என்பது சட்டக் கல்வி இயக்ககத்தால் நடத்தப்படும் மாதிரி நீதிமன்ற போட்டியை குறிக்கும்.

4) 'எழுத்து மூலமான வாதுரை' என்பது விதிகளுக்குட்பட்டு ஒவ்வொரு அணியும் இரு தரப்பினர் சார்பாக சமர்ப்பிக்கும் எழுத்து மூலமான வாதங்களை குறிக்கும். எழுத்து மூலமான வாதுரை என்பது எழுத்துமூலமாக சமர்பித்தல் என்றும் குறிக்கப்படும்.

5) மாதிரி நீதிமன்றப் போட்டிகள் குறித்த அலுவல் இணையதளம் என்பது www.tndls.ac.in.

6) 'வாய்மூலமான சுற்றுகள்' என்பது ஒருங்கிணைப்பு குழுவால் அளிக்கப்படும் குலுக்கல் மற்றும் அமைப்பு முறை மூலம் அணிதரப்பு மற்றும் எதிர்தரப்பு நிர்ணையிக்கப்பட்டதன் அடிப்படையில், அணிகளின் இரு மாணவ வழக்குரைஞர்களினால் ஒரு தரப்பின் சார்பாக நடுவர்(கள்) முன்பாக வாதாடுதல் மூலம் சமர்ப்பிக்கப்படும் வாதுரையாகும்.

7) 'ஒருங்கிணைப்பு குழு' என்பது போட்டியினை கண்காணிப்பது தொடர்பாக தமிழ்நாடு மாநில மாதிரி நீதிமன்றப் போட்டிக் குழுவினையும், மற்ற விசயங்கள் தொடர்பாக போட்டியினை நடத்தும் கல்லூரியினையும் குறிக்கும்.

8) 'திருக்குள்ளியியல்' என்பதும் மற்றும் அதன் உள்ளடக்கமும்

- புத்தகத்திலோ, கட்டுரைகளிலோ அல்லது வேறு எவ்வித மூலங்களிலோ உள்ள ஒருவரின் கருத்தமைப்புகள் மற்றும் வார்த்தைகளை தன்னுடையது போல் சித்தரிப்பது;
- ஏற்கனவே உள்ள மூலங்களிலிருந்து பெரும் பகுதியை எடுத்து புதியது மற்றும் அசலானது போன்று சமர்ப்பிப்பது;
- வேறு ஒருவருடைய கருத்தமைப்பினை அல்லது வார்த்தைகளை உரிய அங்கீகாரம் அல்லது குறிப்பீடு இல்லாமல் நகலிடுவது;
- உரிய அங்கீகாரமில்லாமல் வார்த்தைகளை மாற்றி வாக்கிய அமைப்பினை மூலத்திலிருந்து நகலிடுதல்;
- எழுதிய வாதுரையின் பெரும் பகுதியை மூலத்திலிருந்து நகலிட்ட வார்த்தைகள் அல்லது கருத்தமைவுகளை கொண்டு உருவாக்குதல்;

- வேறு ஒருவருடைய எழுத்துமூல வாதுரையை தன்னுடையது போல் அச்சிட்டு சமர்ப்பித்தல்.

9) 'மறுத்தளித்தல்' என்பது அனைத்து மாணவ வழக்குரைஞர்களும் தங்களுடைய வாதுரைகளை சமர்ப்பித்த பிறகு எதிர் மனுதாரரின் வாதத்திற்கு பதிலளிக்கும் வண்ணம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்படும் வாதமாகும்.

10) 'ஆராய்சியாளர்' என்பது அணி பதிவின்போது குறிப்பிட்டு பதிவு செய்யப்படும் அணியின் உறுப்பினரை குறிக்கும். தேவையேற்படின் ஒருங்கிணைப்பு குழுவின் உள்ளார்ந்த அதிகாரத்திற்குட்பட்டு ஆராய்ச்சியாளர், மாணவ வழக்குரைஞராக செயல்பட வாய்ப்பு வழங்கப்படும்.

11) 'ஆராய்ச்சியாளர் தேர்வு' என்பது போட்டியின் போது நடத்தப்படும் எழுத்து மூலமான தேர்வினைக் குறிக்கும்.

12) 'விதிமுறைகள்' என்பது இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளையும் ஒருங்கிணைப்பு குழுவினரால் அவ்வப்போது வழங்கப்படும் ஒழுங்குமுறைகள், அறிவுறுத்தல்கள் வழிமுறைகளை குறிக்கும்.

13) 'மாணவ வழக்குரைஞர்' என்பது வாய்மூலமான சுற்றுகளின் போது நடுவர் முன்பாக வாய்மூலமாக வாதங்களை சமர்ப்பிக்கும் நபரைக் குறிக்கும்.

14) 'மறு-மறுத்தளித்தல்' என்பது மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட மறுத்தளித்தலுக்கான எதிர்மனுதாரின் எதிர் வாதமாகும்.

15) 'அணி குறியீடு' என்பது ஒருங்கிணைப்பு குழுவால் போட்டியில் பங்குபெறும் அணிகளுக்கு வழங்கப்படும் தனித்துவமான குறியீடுகளை குறிக்கும்.

## II. விளக்க விதி

சமத்துவம் மற்றும் வெளிப்படை தன்மையினை முன்னிறுத்தி இவ்விதிகளுக்கு விளக்கமளித்திட மாநில மாதிரி நீதிமன்றப் போட்டிக் குழுவிற்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. இவ்விதிகளுக்கு மாநில மாதிரி நீதிமன்றப் போட்டிக் குழு கொடுக்கும் விளக்கம் இறுதியானதாகும். இவ்விதிகளை பயன்படுத்துவது சம்மந்தமாக மாநில மாதிரி நீதிமன்றப் போட்டிக் குழு எடுக்கும் முடிவுகள் இறுதியானது கட்டுப்படுத்தக்கூடியது.

## III. மொழி

மாதிரி நீதிமன்ற போட்டிகள் தமிழ்மொழியில் மட்டுமே நடைபெறும்.

## IV. போட்டிகளின் அமைப்பு முறை

மாநில அளவிலான மாதிரி நீதிமன்ற போட்டிகள் தமிழ்நாட்டில் சட்டக் கல்வியை போதிக்கும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கு இடையில் சட்டக் கல்வி இயக்ககம் மற்றும் மாநில மாதிரி நீதிமன்றப் போட்டிக் குழுவின் வழிகாட்டுதலின்படி நடைபெறும். மாதிரி

நீதிமன்றப் போட்டிக்கான வழக்கின் பொருண்மைகளை மாதிரி நீதிமன்றப் போட்டிக் குழு தயார் செய்து போட்டி நடத்திடும் கல்லூரிகளுக்கு அளிக்கும் அல்லது வழக்கின் பொருண்மைகளை மாதிரி நீதிமன்றப் போட்டியை நடத்திடும் கல்லூரி தயார் செய்திடும். மாநில நீதிமன்ற போட்டிக் குழு வழக்கின் பொருண்மையை சட்டக் கல்வி இயக்கக அலுவல் இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடும். இவ்விதிகளில் ஏதேனும் மாற்றம் இருப்பின் அவை இணைப்புகளாக சட்டக் கல்வி இயக்ககத்தின் அலுவல் இணையதளமான www.tndls.ac.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். மாதிரி நீதிமன்ற போட்டிகளில் தொடர்புடைய அனைத்து எழுத்து பூர்வமான வாதுரைகளும் மற்றும் இதர ஆவணங்களும் சட்டக் கல்வி இயக்ககத்தின் தனிப்பட்ட சொத்துகளாக கருதப்படும்.

## V. மாநில மாதிரி நீதிமன்றப் போட்டிக் குழு

மாநில மாதிரி நீதிமன்றப் போட்டிக் குழுவானது அவ்வப்போது சட்டக் கல்வி இயக்குநரால் நியமிக்கப்படுவதாகும். அதில் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்-செயலர் மற்றும் ஐந்திற்கும் மிகாத உறுப்பினர்கள் சட்டக் கல்வி இயக்குநரால் நியமிக்கப்படுவர். மாநில அளவிலான மாதிரி நீதிமன்ற போட்டிகளை மாநில மாதிரி நீதிமன்றப் போட்டிக் குழு கண்காணிக்கும்.

## VI. மாதிரி நீதிமன்ற அமைப்பு

மாநில மாதிரி நீதிமன்ற போட்டிகளில் கலந்துகொள்ள தமிழ்நாட்டில் சட்டக் கல்வியை போதிக்கும் அனைத்து கல்வி நிறுவனங்களும், அலுவல் ரீதியாக அழைக்கப்படுவர். மாநில அளவிலான மாதிரி நீதிமன்ற போட்டிகளை நடத்திட ஏதேனும் ஒரு அரசு சட்டக் கல்லூரி தெரிவு செய்யப்படும். மாநில நீதிமன்ற போட்டிகள் நேரடியாக மட்டுமே நடைபெறும். நேரடியாக நடத்த இயலாத, தவிர்க்க முடியாத அசாதாரணமான சூழ்நிலைகளில் தேவைப்படின் மாநில மாதிரி நீதிமன்றப் போட்டிக் குழுவின் தன் விருப்புரிமையின் பேரில் இணைய வழியாக மாதிரி நீதிமன்றப் போட்டிகளை நடத்தும்.

## VII. ஆராய்சியாளர் தேர்வு

1) அனைத்து அணிகளும் கட்டாயமாக ஆராய்ச்சியாளர் தேர்வில் கலந்து கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அது அவ்வணிகளை தகுதி நீக்கம் செய்ய வழிவகுக்கும்.
2) பதிவு படிவத்தில் ஆராய்ச்சியாளர் என குறிப்பிடப்பட்டுள்ள நபர் மட்டுமே ஆராய்ச்சியாளராக அனுமதிக்கப்படுவர். தேர்வினை எழுத ஆராய்ச்சியாளர் தேர்வு கொள்குறி வகைவினா, விளக்க வினாக்களும் நடத்தப்படும். உள்ளடக்கியதாக 1 மணிநேரத்திற்கு வினாக்களின் எண்ணிக்கை, வகைகள் போன்றவை ஒருங்கிணைப்பு குழுவின் உள்ளார்ந்த அதிகாரத்திற்குட்பட்டது.
3) மாதிரி நீதிமன்ற போட்டியின் வழக்கின் பொருண்மைகள் குறித்த தெளிவினையும், அது சம்மந்தமான சட்ட அறிவினையும் மற்றும் சம்பந்தப்பட்ட சட்ட விதிகளை பயன்படுத்துதல் குறித்த அறிவினை சோதிப்பதே ஆராய்ச்சியாளர் தேர்வின் நோக்கமாகும்.
4) ஆராய்ச்சியாளர் தேர்விற்கு குறிப்புரைகள் சட்டப் புத்தகங்கள், புத்தகங்கள், மின்னணு உபகரணங்கள் மற்றும் இதர பொருட்கள் எவையும் கட்டாயமாக அனுமதிக்கப்படமாட்டாது.
5) ஆராய்ச்சியாளர் தேர்வில் பெறப்பட்ட மதிப்பெண் அடிப்படையில் சிறந்த ஆராய்ச்சியாளர் தெரிவு செய்யப்படுவார்.

## VIII. தகுதி சுற்று

1) தகுதி சுற்றுக்கான நடைமுறைகள் ஒருங்கிணைப்பு குழுவால் நிர்ணையிக்கப்பட்ட தினத்தில் அளிக்கப்படும் குலுக்கல் மற்றும் அமைப்புமுறை மூலம் தெரிவு செய்யப்படும், அணியின் தரப்பு மற்றும் எதிர்தரப்பு முடிவு செய்தல் மூலம் துவங்கும்.
2) ஒவ்வொரு அணியினருக்கும் அவர்களுடைய வாதாடுதலுக்காக 30 நிமிடம் ஒதுக்கப்படும். கூடுதல் நேரம் கண்டிப்பாக ஒதுக்கப்படமாட்டாது. அணியினர் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட 30 நிமிடங்களில் 2 நிமிடங்கள் மறுதளித்தல் மற்றும் மறு-மறுத்தளித்தலுக்கு முன்கூட்டியே ஒதுக்கீடு செய்து கொள்ளலாம். இதனை சுற்றுகள் துவங்குவதற்கு முன்பாகவே ஒருங்கிணைப்பு குழுவால் நியமிக்கப்படும் நீதிமன்ற அலுவலர்களிடம் தெரியப்படுத்தி இருக்க வேண்டும்.
3) தகுதி சுற்றுகளில் ஒவ்வொரு அணியினரும், அணி தெரிவு செய்யும் அடிப்படையில் இரண்டு சுற்றுகளில் பங்குபெற வேண்டும்.
4) தகுதி சுற்று ஒவ்வொரு அணியினரும் வெவ்வேறு அணிகளுக்கு எதிராக இரு தரப்பிற்கும் வாதிடும் வகையில் அணி தெரிவு அமையும்.
5) ஒவ்வொரு மாணவ வழக்குரைஞரும் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு வழங்கப்பட்ட மதிப்பெண்களும், எழுத்து மூலமான வாதுரைக்கு வழங்கப்பட்ட மதிப்பெண்களோடு சேர்த்த கூடுதலே, தகுதி சுற்றுகளின் மதிப்பெண்களாகும்.
6) மாதிரி நீதிமன்ற போட்டியில் சிறந்த மாணவ வழக்குரைஞரை தெரிவு செய்ய தகுதி சுற்றுகளில் மாணவ வழக்குரைஞர் ஒவ்வொருவரும் பெற்ற மதிப்பெண்கள், (எழுத்து மூலமான வாதுரையின் மதிப்பெண்கள் கொள்ளப்படும்).

## IX. காலிறுதி சுற்று

1) எழுதிய வாதுரைக்கான மதிப்பெண்களோடு இரு தகுதி சுற்றுகளின் மதிப்பெண்களை சேர்த்து அதன் அடிப்படையில் முதல் 8 இடங்களை பிடிக்கும் அணிகள் காலிறுதி சுற்றுக்கு தகுதி பெறுவர்.
2) காலிறுதி சுற்று வெற்றி/தோல்வி சுற்றாக அமையும். இச்சுற்றிற்க்கு அணிகள் தங்களுடைய தரப்பினையும், எதிரணியினரையும் குலுக்கல் முறையில் தெரிவு செய்வர்.
3) ஒவ்வொரு அணியினரும் தங்களுடைய வாய் மூலமான வழக்குரையை சமர்ப்பிக்க 40 நிமிடம் ஒதுக்கப்படும். கூடுதல் நேரம் கண்டிப்பாக ஒதுக்கப்படமாட்டாது. அணியினர் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட 40 நிமிடங்களில் 2 நிமிடங்கள் மறுதளித்தல் மற்றும் மறு-மறுத்தளித்தலுக்கு முன்கூட்டியே ஒதுக்கீடு செய்து கொள்ளலாம். இதனை சுற்றுகள் துவங்குவதற்கு முன்பாகவே ஒருங்கிணைப்பு குழுவால் நியமிக்கப்படும் நீதிமன்ற அலுவலர்களிடம் தெரியப்படுத்தி இருக்க வேண்டும்.
4) நடுவர்கள் தங்களின் தன்விருப்ப அதிகாரத்திற்குட்பட்டு ஒவ்வொரு அணியினருக்கும் 2 நிமிட நேர நீட்டிப்பு வழங்கலாம்.
5) எதிர் தரப்பினர் எழுதிய வாதுரை ஒவ்வொரு அணியினருக்கும் வழங்கப்படும். அதனை சுற்றின் முடிவில் ஒருங்கிணைப்பு குழுவிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

## X. அரையிறுதி சுற்று

1) காலிறுதி சுற்றில் வெற்றி பெற்ற அணிகள் அரையிறுதி சுற்றில் பங்குபெற தகுதிபெறும்.
2) அரையிறுதி சுற்று வெற்றி/தோல்வி சுற்றாக அமையும். இச்சுற்றிக்கு அணிகள் தங்களுடைய தரப்பிணையும், எதிரணியினரையும் குலுக்கல் முறையில் தெரிவு செய்வர்.

3) ஒவ்வொரு அணியினரும் தங்களுடைய வாய் மூலமான வழக்குரையை சமர்ப்பிக்க 40 நிமிடம் ஒதுக்கப்படும். கூடுதல் நேரம் கண்டிப்பாக ஒதுக்கப்படமாட்டாது. அணியினர் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட 40 நிமிடங்களில் 3 நிமிடங்கள் மறுதளித்தல் மற்றும் மறு-மறுத்தளித்தலுக்கு முன்கூட்டியே ஒதுக்கீடு செய்து கொள்ளலாம். இதனை சுற்றுகள் துவங்குவதற்கு முன்பாகவே ஒருங்கிணைப்பு குழுவால் நியமிக்கப்படும் நீதிமன்ற அலுவலர்களிடம் தெரியப்படுத்தி இருக்க வேண்டும்.
4) நடுவர்கள் தங்களின் தன்விருப்ப அதிகாரத்திற்குட்பட்டு ஒவ்வொரு அணியினருக்கும் 3 நிமிட நேர நீட்டிப்பு வழங்கப்படலாம்.
5) எதிர் தரப்பினர் எழுதிய வாதுரை ஒவ்வொரு அணியினருக்கும் வழங்கப்படும். அதனை சுற்றின் முடிவில் ஒருங்கிணைப்பு குழுவிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

## XI. இறுதி சுற்று

1) அரையிறுதி சுற்றில் வெற்றி பெற்ற அணிகள் இறுதி சுற்றில் பங்கு பெற தகுதிபெறும்.
2) இறுதி சுற்று வெற்றி/தோல்வி சுற்றாக அமையும். இச்சுற்றிக்கு அணிகள் தங்களுடைய தரப்பினை. குலுக்கல் முறையில் தெரிவு செய்வர்.
3) ஒவ்வொரு அணியினரும் தங்களுடைய வாய் மூலமான வழக்குரையை சமர்ப்பிக்க 40 நிமிடம் ஒதுக்கப்படும். கூடுதல் நேரம் கண்டிப்பாக ஒதுக்கப்படமாட்டாது. அணியினர் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட 40 நிமிடங்களில் 5 நிமிடங்கள் மறுதளித்தல் மற்றும் மறு-மறுத்தளித்தலுக்கு முன்கூட்டியே ஒதுக்கீடு செய்து கொள்ளலாம். இதனை சுற்றுகள் துவங்குவதற்கு முன்பாகவே ஒருங்கிணைப்பு குழுவால் நியமிக்கப்படும் நீதிமன்ற அலுவலர்களிடம் தெரியப்படுத்தி இருக்க வேண்டும்.
4) நடுவர்கள் தங்களின் தன்விருப்ப அதிகாரத்திற்குட்பட்டு ஒவ்வொரு அணியினருக்கும் 5 நிமிட நேர நீட்டிப்பு வழங்கலாம்.
5) எதிர் தரப்பினர் எழுதிய வாதுரை ஒவ்வொரு அணியினருக்கும் வழங்கப்படும். அதனை சுற்றின் முடிவில் ஒருங்கிணைப்பு குழுவிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.
6) இறுதிச் சுற்றில் அணியினர் சம மதிப்பெண் பெறும் பட்சத்தில் எழுத்து மூலமான வாதுரைக்கான மதிப்பெண் எடுத்துக் கொள்ளப்படும்.

## XII. வேவுகாணி தடை

வாதாடுதலின் போது எவ்வகையிலும் வேவுகாணியில் ஈடுபடுவது தடை செய்யப்படுகிறது. எவ்வணியை சார்ந்தவரும் வேவுகாணி செயலில் ஈடுபட்டால் அந்த அணி போட்டியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படும்.

## XIII. பங்கேற்பு மற்றும் தகுதி நிலை

1) போட்டியினை நடத்த தெரிவு செய்யப்பட்ட அரசு சட்டக் கல்லூரியின், அணி அப்போட்டியில் பங்கேற்கக் கூடாது.
2) மாநில மாதிரி நீதிமன்ற போட்டிகளில் பங்கு பெற தமிழ்நாட்டில் சட்டக் கல்வியை போதிக்கும் அரசு சட்டக் கல்வி நிறுவனங்கள் தங்களுடைய இளங்கலை சட்ட மாணவ - மாணவிகளை பங்கு பெறச் செய்யலாம்.
3) பங்குபெறும் அணிகளுக்கு பதிவுக் கட்டணம் ஏதும் கிடையாது.
4) அரசு சட்டக் கல்லூரி அணிகளைத் தவிர பிற அணிகள் அனைத்தும் அவர்களின் சொந்த செலவில் போட்டியில் பங்குபெறலாம்.

5) அனைத்து அணி உறுப்பினர்களும் மூன்றாண்டு/ஐந்தாண்டு இளங்கலை சட்டம் படிக்கின்ற மாணவ- மாணவியராக இருக்க வேண்டும். அணி பதிவு செய்யப்படும் போது அணி உறுப்பினர்கள் எந்த ஆண்டு படிக்கின்றனர் என்பது விண்ணப்பத்தில் குறிக்கப்பட வேண்டும், அத்துடன் அவர்களின் அலுவல் ரீதியான அடையாள அட்டை நகலும் கல்லூரியின் முதல்வர்/தலைவர் கையொப்பமிட்ட முத்திரையிடப்பட்ட ஆளறி நடத்தை சான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்.
6) ஒவ்வொரு கல்வி நிறுவனத்தில் இருந்து ஒரு அணி மட்டுமே பங்குபெற முடியும். போட்டியில் அணி ஒதுக்கீடு குறித்து ஏதேனும் கோரிக்கை விடுத்தால் அது தகுதி இழப்பை ஏற்படுத்தும்.
7) பூர்த்தி செய்த அணி பதிவு படிவத்தினையும் அதன் மின் நகலையும் போட்டி நடத்தும் கல்லூரிக்கு அனுப்பி, அதன் பின்னர் போட்டி நாளில் நேரடி பதிவின் மூலம் பதிவு நிறைவு பெறும்.
8) பதிவு அனுப்பிய இரண்டு நாட்களில் பதிவிற்கான ஒப்புகை, மின்னஞ்சல் மூலம் போட்டி நடத்தும் கல்லூரியிடமிருந்து அணிக்கு அனுப்பி வைக்கப்படும்.
9) போட்டி அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து 10 தினங்களுக்குள் தற்காலிக பதிவு செய்ய அனுமதிக்கப்படுவர்.
10) அணியில் 3 உறுப்பினர்கள் இருக்க வேண்டியது கட்டாயம். போட்டிக்கான பதிவினை மேற்கொள்ளும்போது 2 மாணவ வழக்குரைஞர் 1 ஆராய்ச்சியாளர் நியமிப்பது கட்டாயமாகும். ஒருங்கிணைப்பு குழுவின் தன்விருப்ப அதிகாரத்திற்குட்பட்டு தவிர்க்க முடியாத காரணங்கள் ஏதும் இன்றி போட்டிகளை நடந்துபவர்கள் தற்காலிக பதிவில் தெரிவிக்கப்பட்ட மாணவ வழக்குரைஞர் 1 மாணவ வழக்குரைஞர் 2 மற்றும் ஆராய்ச்சியாளர் நியமனங்களில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது.
11) ஒவ்வொரு அணிக்கும் அணி குறியீடு, மாதிரி நீதிமன்ற ஒருங்கிணைப்பாளர்களால் வழங்கப்படும். அதுவே அனைத்து விதமான தொடர்புகளுக்கும் அடையாள குறியீட்டினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
12) அனைத்து அணி உறுப்பினர்களும். பொறுப்பு பேராசிரியரும் ஒருங்கிணைப்பு குழுவின் மின்னஞ்சலையும், இணையதளத்தையும் பயன்படுத்தி அடுத்த கட்ட தகவல்களை தெரிந்து கொள்ளலாம்.

## XIV. சீருடை

பங்கேற்பாளர்கள் மாதிரி நீதிமன்ற அறையிலிருக்கும் போது கீழ்க்கண்ட சீருடையில் மட்டுமே கண்டிப்பாக இருக்க வேண்டும்.

- **பெண்கள்**

வெள்ளை நிற சல்வார் மற்றும் குர்தாவுடன் அல்லது வெள்ளைநிற சட்டை மற்றும் கருப்பு நிற முழு கால் சட்டை அத்துடன் கருப்பு நிற காலணிகள் மற்றும் கருப்பு நிற கோட் அணிந்திருக்க வேண்டும்.

- **ஆண்கள்**

வெள்ளை நிற சட்டை மற்றும் கருப்பு நிற முழு கால் சட்டை, கருப்பு நிற கழுத்துப் பட்டை இத்துடன் கருப்பு நிற காலணிகள் மற்றும் கருப்பு நிற கோட் அணிந்திருக்க வேண்டும்.

## XV. தகவல் வெளியிட தடைசெய்யும் விதி

1) அணியினர் தங்களுடைய கல்வி நிறுவனத்தின் பெயரை போட்டி முடியும் வரை எக்காரணம் கொண்டும் வெளியிட கூடாது. அவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அணி குறியீட்டினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
2) போட்டியின் எச்சுற்றிலும் நடுவர்களுக்கு அணியினர் தங்களின் கல்லூரியை அடையாளப்படுத்த கூடாது. அவ்வாறு செய்தல் அது அணியின் தகுதி இழப்பாகும்.
3) போட்டியினை நடத்தும் கல்லூரியும் பங்குபெறும் கல்லூரியின் பெயர்களை வெளியிடக் கூடாது.

## XVI. விளக்கங்கள்

1) அணியினர் தங்களுக்கு கொடுக்கப்பட்ட மாதிரி நீதிமன்ற வழக்கின் பொருண்மைகள் குறித்த விளக்கங்களை / திருத்தங்களை ஒருங்கிணைப்பு குழு / போட்டி நடத்தும் கல்லூரி வழங்கிய மின்னஞ்சல் முகவரிக்கு எழுத்து பூர்வமாக, அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்ட தேதி அன்றோ அல்லது முன்பாகவோ சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.
2) ஒருங்கிணைப்பு குழு / போட்டி நடத்தும் கல்லூரி குறிப்பிட்ட தேதியன்று கோரப்பட்ட அனைத்து விளக்கங்களையும் மின்னஞ்சல் வாயிலாக பங்கேற்கும் கல்லூரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பிறகு விளக்கங்கள் குறித்த எந்த கோரிக்கைகளும் ஏற்றுகொள்ளப்படாது.

## XVII. முடிவுகள் வெளியிடுதல்

அனைத்து சுற்றுகளுக்குமான முடிவுகள் ஒவ்வொரு சுற்றும் முடிந்த பிறகு அதிகபட்சமாக 1 மணிநேரத்திற்குள் அறிவிக்கப்படும். ஒருங்கிணைப்பு குழுவின் முடிவுகள் இறுதியானது மற்றும் அணிகளை கட்டுப்படுத்தக் கூடியது.

## XVIII. எழுத்து மூலமான வாதுரைகள் சமர்ப்பித்தல்

1) பங்கேற்கும் ஒவ்வொரு அணியினரும் மேல்முறையீட்டாளர் / விண்ணப்பதாரர் / வாதி மனுதாரர் / மற்றும் எதிர்மனுதாரர் / எதிர்தரப்பினர் / பிரதிவாதி / மறுதரப்பினர் ஆகிய இருதரப்பினருக்கும் எழுதிய வாதுரைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2) பங்கேற்கும் ஒவ்வொரு அணியினரும் மனுதாரர் / மேல்முறையீட்டாளர் / விண்ணப்பதாரர் / வாதி தரப்பினருக்கு எழுதிய வாதுரையின் முன்பகுதி ஊதா நிறத்திலும் மற்றும் எதிர்மனுதாரர் / எதிர்தரப்பினர் / பிரதிவாதி / மறுதரப்பினர் ஆகிய எழுதிய வாதுரையின் முன்பகுதி இளஞ்சிவப்பு நிறத்திலும் அச்சிடப்பட வேண்டும்.
3) எழுத்து பூர்வ வாதுரையின் முன்பக்கத்தின் வலதுமேல் பக்கத்தில் அணியின் அடையாள குறியீடு அச்சிடப்பட வேண்டும்.
4) அணியின் அடையாள குறியீடு எழுதிய வாதுரையின் முன்பக்கம் தவிர வேறு எங்கும் குறிப்பிடக் கூடாது.
5) மின்னணு முறையில் எழுத்து பூர்வ வாதுரை, PDF வடிவத்தில் ஒருங்கிணைப்பு குழு / போட்டி நடத்தும் கல்லூரி மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
6) மின்னணு முறையில் ஒருங்கிணைப்பு குழுவின் மின்னஞ்சலுக்கு அறிவிக்கப்பட்ட கடைசி தேதிக்கு முன்பாக அனுப்பப்பட்ட எழுத்து பூர்வ வாதுரையே இறுதியானது மற்றும் கட்டுப்படுத்த கூடியது. அதன் பின்னர் அதனை எக்காரணம் கொண்டும் எந்நேரத்திலும் திருத்தம் செய்யவோ மாற்றவோ முடியாது.

7) அச்சிடப்பட்டு புத்தக வடிவில் தைக்கப்பட்ட 5 எழுத்து பூர்வமான வாதுரைகளை ஒவ்வொரு தரப்பிற்கும் ஒருங்கிணைப்பு குழுவிடம் நிர்ணையிக்கப்பட்ட தேதியில் நேரடியாக சமர்ப்பித்திட வேண்டும். அணியினர் தங்களுக்கு தேவையான கூடுதல் கைபிரதிகளை அவர்கள் வைத்துக் கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் ஒருங்கிணைப்பு குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து பூர்வமான வாதுரைகள் அணியினருக்கு திரும்ப தரப்படமாட்டாது.

8) மின்னணு முறையிலும், நேரடியாகவும் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து பூர்வமான வாதுரைகள் ஒன்றாக இருக்க வேண்டும். அவற்றில் மாற்றம் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டால் எழுத்து பூர்வமான வாதுரைகள் நிராகரிக்கப்படும். எவ்வித மதிப்பெண்களும் வழங்கப்படமாட்டாது.

9) மின்னணு முறையில் மின்னஞ்சலுக்கு எழுத்து பூர்வமான வாதுரைகள் சமர்ப்பிக்க நிர்ணையிக்கப்பட்ட தினத்திற்கு பிறகு கால தாமதமாக அனுப்பப்படும் எழுத்து பூர்வமான வாதுரைகளுக்கு காலதாமதமான ஒவ்வொரு தினத்திற்கும் 2 மதிப்பெண்கள் அபராதம் விதிக்கப்படும்.

## XIX. எழுத்து பூர்வமான வாதுரைகளின் வரைவு விதிகள்

1) எழுத்து பூர்வமான வாதுரைகள் அனைத்து பகுதிகளும் ஒரே கோப்பாக இருக்க வேண்டும்.

2) எழுத்து பூர்வமான வாதுரைகள் PDF வடிவத்தில் மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்விதிக்கு புறம்பாக இருக்கும் எழுத்து பூர்வமான வாதுரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3) எழுத்து பூர்வமான வாதுரைகளின் அனைத்து பக்கங்களும் A4 அளவில் 4 பக்கமும் ஒரு அங்குல அளவு விளிம்பு இடைவெளி விட்டு இருக்க வேண்டும்.

4) எழுத்துபூர்வமான வாதுரைகள் தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். கீழ்கண்ட சிறப்பு குறிப்புகள் கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும்.

- **மொழி:** தமிழ்
- **எழுத்து வடிவம் மற்றும் அளவு:** பாமினி-12
- **வரிகளுக்கிடையேயான இடைவெளி** 1.5 (இந்த இடைவெளி முகப்பு பக்கம், அட்டவணைகள், அடி குறிப்புகள் அல்லது தலைப்பு குறிப்புகள் ஆகியவைகளுக்கு பின்பற்ற வேண்டிய அவசியமில்லை)
- **அடி குறிப்புகளின் எழுத்து வடிவம் மற்றும் அளவு:** பாமினி-10
- அடிக் குறிப்புகள் வரி இடைவெளி -1.0
- பத்தி இடைவெளி ஏதுமில்லை.
- அடிக் குறிப்பு இடையில் கூடுதல் இடைவெளி தேவையில்லை.
- சீரமைப்பு (மொத்தம் எழுதிய வாதுரையின் அமைப்பு): அனைத்து பக்கங்களில் 1 அங்குல விளிம்புடன் கூடிய நியாயமான சீரமைப்பு.
- **மேற்கோள் காட்டும் முறை:** Blue Book Harward Law Review 20th Edi. Indian Law Institute / அங்கீகரிக்கப்பட்ட மேற்கோள் காட்டும் முறை. ஒருமித்த போட்டிக்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து எழுத்து மூலமான வாதுரைகளும் திருக்குள்ளியல் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படும். எழுத்து பூர்வமான வாதுரையில் பின் இணைப்புகள் / பிற்சேர்க்கைகள் / புகைப்படங்கள் / வரைபடங்கள் ஆணை உறுதி பத்திரங்கள் சான்றாவணங்கள் மற்றும் மேற்கண்டவைகள் போன்ற எதனையும் கட்டாயமாக இணைக்க கூடாது.

## XX. எழுத்துபூர்வ வாதுரைகளின் அமைப்பு

ஒவ்வொரு எழுத்து பூர்வமான வாதுரையும் முகப்பு பக்கத்தை உள்ளடக்கிய 35 பக்கங்களுக்கு மிகாமல் A4 அளவில் கீழே குறிப்பிட்டுள்ள பகுதிகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

1) முகப்பு பக்கம்(மனுதாரர் அல்லது எதிர் மனுதாருக்காக எழுத்து பூர்வமான வாதுரை என குறிப்பிடப்பட்டு உரிய வழக்கின் தலைப்பு மற்றும் நீதிமன்றம்/தீர்ப்பாயம் ஆகியவை குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.
2) பொருளடக்கம்
3) முன் தீர்ப்புகளின் பட்டியல்
4) நீதிமன்ற ஆள்வரை (ஒரு பக்கத்திற்கு மிகாமல்)
5) வழக்கின் பொருண்மைகள் சுருக்கமாக(ஒரு பக்கத்திற்கு மிகாமல்): வாதிடும் படியான வழக்கு பொருண்மைகள் தண்டத்திற்குள்ளாகும்.
6) எழு வினாக்கள்
7) சுருக்க வாதுரை / வழக்குரை
8) விரிவான வாதுரை / எழுத்து பூர்வமான வழக்குரை
9) இறைஞ்சுதல்

## XXI. தொகுப்பு

1) அச்சிடப்பட்ட எழுத்து பூர்வமான வாதுரைகளை ஒருங்கிணைப்பு குழுவிடம் சமர்ப்பிக்கும் போது வழக்கோடு தொடர்புடைய வாய்மூலமான, வாதுரைக்கும் போது நடுவர்களுக்கு சமர்ப்பிக்க கூடிய முன் தீர்ப்புகளையும் சட்ட வகையங்களையும் தொகுத்து வழங்கிட வேண்டும்.
2) ஒவ்வொரு அணியினரும் தாங்கள் சமர்ப்பிக்கும் தொகுப்பின் நகல் ஒன்றினை தாங்கள் கைபிரதியாக வைத்துக் கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் ஒருங்கிணைப்பு குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட தொகுப்பு அணியினருக்கு மீண்டும் வழங்கப்படமாட்டாது.
3) பங்கேற்பாளர்கள் தொகுப்புகளை சமர்ப்பிக்கும்போது தங்களுடைய அடையாளத்தை எவ்விடத்திலும் வெளிப்படுத்த கூடாது.
4) தங்கள் கல்லூரி / கல்வி நிறுவனத்தின் பெயர் மற்றும் முத்திரை, குறியீடு, அடையாளம், இலஞ்சினை போன்றவைகள் இருப்பின் அவற்றை முறையாக மையிட்டு மறைத்திட வேண்டும். இதில் விதிமீறல் இருப்பின் அவ்வணி உடனடியாக தகுதிநீக்கம் செய்யப்படும்.

## XXII. எழுத்து மூலமான வாதுரையின் மதிப்பீடு

எழுத்து மூலமான வாதுரைகள் 100 மதிப்பெண்களுக்கு கீழே குறிப்பிடப்பட்ட முன் தீர்மானிக்கப்பட்ட காரணிகளை கொண்டு ஒருங்கிணைப்பு குழுவால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவால் மதிப்பீடு செய்யப்படும்.

| பொருளடக்கம் | மதிப்பெண்கள் |
|---|---|
| பொருண்மை குறித்த தெளிவு | 10 |
| பொருண்மைகளை வாதுரையில் கையாளும் திறன் | 20 |
| முன் தீர்ப்புக்களை கையாளும் திறன் | 20 |
| தொடர்புடைய சட்டம் குறித்த அறிவு மற்றும் பொருள் விளக்கம் செய்யும் திறன் | 20 |

| | |
|---|---|
| இலக்கணம் மற்றும் மொழி நடை | 10 |
| தனித்தன்மை | 10 |
| இறைஞ்சுதல் | 10 |
| மொத்தம் | 100 |

## XXIII.வாதாடுதல் மூலம் சமர்பிக்கப்படும் வாதுரைக்கான மதிப்பீடு

அணிகள் அனைத்து சுற்றுக்களிலும் வாதாடுதல் மூலம் சமர்பிக்கப்படும் வாதுரைகள் கீழ்க்கண்ட காரணிகள் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

| பொருளடக்கம் | மதிப்பெண்கள் |
|---|---|
| பொருண்மை குறித்த அறிவு | 10 |
| தொடர்புடைய சட்டம் குறித்த அறிவு | 10 |
| சட்டம் மற்றும் பொருண்மைகளை பொருள் விளக்கம் செய்யும் திறன் | 20 |
| வாதிடும் திறன் | 15 |
| எண்ணம் மற்றும் வெளிப்படுத்துதலில் தெளிவு | 15 |
| நீதிமன்ற நடத்தை | 10 |
| வினாக்களுக்கு விடையளிக்கும் திறன் | 10 |
| ஒட்டுமொத்த வாதமளிப்பு, நீதிமன்றத்தில் தோன்றும் தன்மை | 10 |
| மொத்தம் | 100 |

## XXIV. விருதுகள் மற்றும் பரிசுகள்

### அ. நற்சான்றிதழ்

இறுதி சுற்றில் வெற்றி பெற்ற அணி போட்டியில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு அவர்களுக்கு நற்சான்றிதழும் வெற்றி கோப்பையும் வழங்கப்படும்.

### ஆ. 2-ஆம் இடம்

இறுதி சுற்றில் பங்குபெற்ற மற்றொரு அணி 2-ஆம் இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டு 2 ஆம் இடத்திற்கான நற்சான்றிதழும் அதற்கான கோப்பையும் வழங்கப்படும்.

### இ. சிறந்த மாணவ வழக்குரைஞர்

தகுதி சுற்றில் ஒவ்வொரு மாணவ வழக்குரைஞரும் பெற்ற மதிப்பெண்கள் எழுத்துபூர்வமான வாதுரைக்கு பெறப்பட்ட மதிபெண் நீங்கலாக) அடிப்படையில் முதல் மதிப்பெண்கள் பெற்ற மாணவ வழக்குரைஞர் (ஆண் மற்றும் பெண் தனித்தனியாக) அறிவிக்கப்பட்டு அவர்களுக்கு நற்சான்றிதழ் மற்றும் சிறந்த மாணவ வழக்குரைஞருக்கான கோப்பையும் வழங்கப்படும்.

### ஈ. சிறந்த எழுத்து பூர்வமான வாதுரை

எழுத்து பூர்வமான வாதுரைகளில் முதல் மதிப்பெண் பெற்ற வாதுரை சிறந்த எழுத்து பூர்வமான வாதுரையாக அறிவிக்கப்பட்டு அதற்கான நற்சான்றிதழும் வெற்றிக் கோப்பையும் வழங்கப்படும்.

### உ. சிறந்த ஆராய்சியாளர்

ஆராய்சியாளர்களுக்கான தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற நபருக்கு சிறந்த ஆராய்சியாளருக்கான நற்சான்றிதழும் வெற்றிக் கோப்பையும் வழங்கப்படும்.

### ஊ. பங்கேற்பாளர் சான்றிதழ்

பங்குபெறும் அனைத்து அணிகளுக்கும் பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்படும். விதிகளுக்குட்பட்டு எழுத்து பூர்வமான வாதுரைகள் சமர்ப்பிக்க தவறிய அணிகளுக்கு பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

## XXV. தங்குமிடம், உணவு மற்றும் பயணப்படி

அரசு சட்டக் கல்லூரிகளின் அணிகளுக்கு மட்டும் தங்கும் வசதி செய்து தரப்படும். பங்குபெறும் பிற அணிகள் தங்களது சொந்த செலவில் கலந்து கொள்ள வேண்டும்.

1) அரசு சட்டக் கல்லூரி அணிகளின் வேண்டுகோளின்படி ஒருங்கிணைப்பு குழு / போட்டி நடத்தும் கல்லூரி மூலம் அணி உறுப்பினர்களுக்கு தங்குமிடம் (பகிர்ந்து கொள்ளுதல் முறையில்) வழங்கப்படும்.
2) கூடுதல் உறுப்பினர்கள் உடன் தங்குவதற்கு எக்காரணம் கொண்டும் அனுமதிக்கபடமாட்டாது.
3) தங்குமிடம் ஒருங்கிணைப்பு குழு / போட்டி நடத்தும் கல்லூரி குறிப்பிடும் நிபந்தனைகளுக்குட்பட்டது.
4) போட்டி நிகழுமிடத்தில் பங்குபெறும் அணியின் அங்கத்தினர்களுக்கு உணவும் சிற்றுண்டியும் வழங்கப்படும்.
5) அரசு சட்டக் கல்லூரிகளின் சார்பாக பதிவு செய்யப்பட்ட அணியின் உறுப்பினர்களுக்கு பயணப்படி அவர்கள் படிக்கும் கல்லூரியிலிருந்து போட்டி நிகழுமிடத்திற்கு பேருந்தில் அல்லது தொடர்வண்டியில் பயணம் செய்தற்கான பயணச்சீட்டை சமர்ப்பிப்பதன் அடிப்படையில் அதில் உள்ளவாறு தொகை வழங்கப்படும்.
6) தொடர்வண்டி பயணம் செய்தவராக இருந்தால், 2 ஆம் வகுப்பு தூங்கும் வசதிக்கு உள்ள தொகையை பயணப்படிக்கான அதிகபட்ச வரையரையாகும்.
7) பேருந்தில் பயணம் செய்திருந்தால் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தூங்கும் வசதி பேருந்து கட்டணமே பயணப்படிக்கான அதிகபட்ச வரையரையாகும்.
8) திரும்பி செல்வதற்கான பயணப்படி போட்டி நிகழ்விடத்திற்கு வருவதற்கு வழங்கப்படும் பயணப்படி போன்றே அமையும்.
9) போட்டியாளர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து போட்டி நிகழ்விடத்திற்கு செல்வதற்கான பயண ஏற்பாட்டினை தேவைப்படின் ஒருங்கிணைப்பு குழு / போட்டி நடத்தும் கல்லூரி, நேரம் குறிப்பிட்டு ஏற்பாடு செய்யும். ஒருங்கிணைப்பு குழு நிர்ணையம் செய்யும் நேரத்தினை அணிகள் தவறாது பின்பற்ற வேண்டும். தவறும் பட்சத்தில் அப்பயணத்திற்கு அணியினர் தங்களுடைய சொந்த ஏற்பாட்டினை செய்து கொள்ள வேண்டும்.

**குறிப்பு:** போட்டி நடைபெற இருக்கும் பகுதி குளிர்மிகுந்த பகுதியாதலால் போட்டியின் போது கல்லூரியில் தங்கவிருக்கும் மாணவர்கள் தங்குவதற்கு ஏதுவாக உடமைகள், படுக்கை

விரிப்புகள் மற்றும் போர்வைகள் கொண்டு வர அறிவுறுத்தப்படுகிறார்கள். போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு ஏதேனும் உடல்நலக் குறைவு இருப்பின் அதற்கான மருந்துகளை உடன் கொண்டுவர அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## XXVI. நடத்தை விதிகள்

1) எந்த அணியின் அங்கத்தினர்களும் மாணவர் நன்னடத்தைக்கு புறம்பாக செயல்படக் கூடாது.
2) எவ்வணியின் அங்கத்தினர்களும் போட்டி நடைபெறும் வளாகத்தின் உள்ளே/வெளியே நிகழ்விட அருகாமையிலோ, தங்குமிடத்திலோ அல்லது இடைபயணங்களின் போதோ ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடக் கூடாது.
3) நடுவர்களின் நம்பகத் தன்மையையோ அல்லது போட்டியினையோ மதிப்பிழக்க செய்யும் அணியினரின் செயலும் அல்லது செய்யத் தவறுகையும் ஒழுங்கீனச் செயலாகும்.
4) அணி உறுப்பினர்கள் போட்டியினை நடத்தும் கல்லூரியின் ஒருங்கிணைப்பு குழுவிடமோ / போட்டி நடத்தும் கல்லூரியையோ அல்லது இதர பேராசிரியர்கள் / அலுவலர்களிடமோ அல்லது மாணவ தன்னார்வாளர்களிடமோ முறையற்ற வகையில் நடந்து கொள்ளுதல், சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் அல்லது கல்லூரியின் நற்பெயருக்கு கலங்கம் விளைவித்தல் போன்றவை கண்டிப்புடன் கையாளப்படும்.
5) எவ்வணியினரும் ஒவ்வொரு சுற்று முடிந்தவுடன் பின்னூட்டம் கோரக் கூடாது.
6) மாதிரி நீதிமன்ற போட்டிக்கான பொருண்மைகளை தயாரித்தவரையோ அல்லது போட்டி நடுவர்களையோ தொடர்பு கொள்ள அணியினர் முயற்சி செய்தால் ஒருங்கிணைப்பு குழுவால் மேற்கொள்ளப்படும். உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7) போட்டியின்போது அனைத்து விதமான வேவுகாணிகளும் கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது. அது அணியினை தகுதியிழக்கச் செய்யும்.
8) அணியின் உறுப்பினர் ஒருவர் ஒழுக்ககேட்டில் ஈடுப்பட்டால் அந்த முழு அணியும் தகுதியிழப்பு செய்யப்படும். அவர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள உரிய அதிகாரிக்கு ஒருங்கிணைப்பு குழு பரிந்துரை செய்யும்.

## XXVII.இதர விதிமுறைகள்

1) இவ்விதிகளை பொருள் கொள்ளுதல், அல்லது வேறுவகையில் ஏதேனும் சச்சரவு ஏற்பட்டால் ஒருங்கிணைப்பு குழுவின் முடிவே இறுதியானது மற்றும் கட்டுப்படுத்த கூடியது.
2) 2024 மாநில மாதிரி நீதிமன்ற போட்டி மேற்கூறிய விதிகளுக்குட்பட்டு நடத்தப்படும். எனினும் தேவை ஏற்படும் பட்சத்தில், மேற்படி விதிகளை திருத்தம் செய்யவும், மாற்றிடவும், மாற்றி அமைக்கவும், வேறுபடுத்தவும் ஒருங்கிணைப்பு குழுவிற்கு அதிகாரம் உள்ளது. அது பங்குபெறும் அணிகளை கட்டுபடுத்த கூடியது இறுதியானது.மேலும் போட்டி நடத்துவது குறித்த ஒருங்கிணைப்பு
3) இவ்விதிகளை பொருள் கொள்ளுதல், அல்லது வேறுவகையில் ஏதேனும் சச்சரவு ஏற்பட்டால் ஒருங்கிணைப்பு குழுவின் முடிவே இறுதியானது மற்றும் கட்டுப்படுத்த கூடியது.
4) 2024 மாநில மாதிரி நீதிமன்ற போட்டி மேற்கூறிய விதிகளுக்குட்பட்டு நடத்தப்படும். எனினும் தேவை ஏற்படும் பட்சத்தில், மேற்படி விதிகளை திருத்தம் செய்யவும், மாற்றிடவும், மாற்றி அமைக்கவும், வேறுபடுத்தவும் ஒருங்கிணைப்பு குழுவிற்கு அதிகாரம் உள்ளது. அது பங்குபெறும் அணிகளை கட்டுபடுத்த கூடியது

இறுதியானது, மேலும் போட்டி நடத்துவது குறித்த ஒருங்கிணைப்பு குழுவின் முடிவுகள் இறுதியானது. அது பங்குபெறும் அணிகளை கட்டுப்படுத்தக் கூடியது.

5) தமிழ்மொழியில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிகளில் புரிந்து கொள்ளலில் ஏதேனும் சிரமம், சந்தேகம் ஏற்படின் மாநில வழக்கு வாதப் போட்டிக்கென மாநிலக் குழுவால் வகுக்கப்பட்டுள்ள ஆங்கில விதிகள் மேலோங்கும்.

-------------------------

# மாநில அளவிலான தமிழ் மாதிரி நீதிமன்ற போட்டி – 2024

## கால அட்டவணை

| | |
|---|---|
| மாதிரி நீதிமன்ற போட்டிக்கான முன்மொழிவு வெளியீடு | 22 ஜனவரி 2024 |
| பதிவு தொடங்கும் நாள் (கூகுள் படிவம்) | 22 ஜனவரி 2024 |
| பதிவு செய்வதற்கான இறுதி நாள் | 31 ஜனவரி 2024 |
| தட்டச்சு செய்யப்பட்ட வாதுரையை (மென்நகல்) மின்னஞ்சல் மூலம் சமர்பித்தல் | 05 பிப்ரவரி 2024 |
| அச்சிடப்பட்ட வாதுரையின் 5 நகல்கள் மற்றும் பதிவுப் படிவம், பயணப்படி மற்றும் தங்குமிடம் போன்ற விவரங்களை விரைவு அஞ்சல் மூலம் சமர்பித்தல் | 07 பிப்ரவரி 2024 |
| தொடக்க விழா, குலுக்கல், ஆய்வாளர் தேர்வு, முதன்மை சுற்று. | 15 பிப்ரவரி 2024 |
| காலிறுதி மற்றும் அரையிறுதி | 16 பிப்ரவரி 2024 |
| இறுதி சுற்று மற்றும் நிறைவு விழா | 17 பிப்ரவரி 2024 |

**குறிப்பு:** காலிறுதியில், அரையிறுதியில், மற்றும் இறுதி சுற்றில் எதிர் தரப்பினர் எழுதிய வாதுரை ஒவ்வொரு அணியினருக்கும் வழங்கப்படும். அதனை சுற்றின் முடிவில் ஒருங்கிணைப்பு குழுவிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

## கல்லூரியை வந்தடையும் போக்குவரத்து வழிகள்

- தேனி புதிய பேருந்து நிலையத்திலிருந்து காலை 9.05 மணியளவில் சட்டக்கல்லூரி பேருந்து புறப்படும். (மூணாறு பேருந்து நிற்குமிடம் அருகில்).

- தேனி பழைய பேருந்து நிலையத்திலிருந்து காலை 9.15 மணியளவில் சட்டக்கல்லூரி பேருந்து புறப்படும்.

- தேனி புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் கம்பம், குமுளி அரசு பேருந்துகளில் மட்டும் ஏறி வீரபாண்டி பேருந்து நிறுத்தத்தில் இறங்கிய பின் ஆட்டோ மூலம் கல்லூரியை வந்தடையலாம்.

- தேனி தொடர்வண்டி நிலையத்திலிருந்து, பழைய பேருந்து நிலையத்தை அடையவும், பின், பழைய பேருந்து நிலையத்திலிருந்து கம்பம், குமுளி அரசு பேருந்துகளில் மட்டும் ஏறி வீரபாண்டி பேருந்து நிறுத்தத்தில் இறங்கிய பின் ஆட்டோ மூலம் கல்லூரியை வந்தடையலாம்.




தேனி புதிய பேருந்து நிலையத்திலிருந்து தேனி அரசு சட்டக்கல்லூரியை வந்தடைவதற்கான கூகுள் வரைபட இணைப்பு இணையதள விரைவு எதிர்வினைக் குறிகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

# அரசு சட்டக் கல்லூரி

## தேனி-625534

## மாநில அளவிலான தமிழ் மாதிரி நீதிமன்ற போட்டி – 2024

**போட்டியில் பங்கேற்கும் மாணவர்கள் அளிக்க வேண்டிய**

**பயணம் மற்றும் தங்குமிடம் பற்றிய விவரம்**

மாணவர் பெயர் :____________________________________

கல்லூரியின் பெயர் :____________________________________

பங்கேற்பு : மாணவ வழக்குரைஞர் / ஆராய்ச்சியாளர்

பயணம் : பேருந்து / தொடர்வண்டி

புறப்படும் இடம் :____________________________________

சேருமிடம் :____________________________________

தொலைவு(கி.மீ) :____________________

தங்குமிடம் தேவை : ஆம் / இல்லை.

தேதி: மாணவர் கையொப்பம்

# அரசு சட்டக் கல்லூரி

## தேனி-625534

## மாநில அளவிலான தமிழ் மாதிரி நீதிமன்ற போட்டி – 2024

**பதிவுப் படிவம்**

| விவரம் | மாணவ வழக்குரைஞர் - 1 | மாணவ வழக்குரைஞர் - 2 | ஆராய்ச்சியாளர் |
|---|---|---|---|
| பெயர் | | | |
| படிப்பு & வருடம் | | | |
| அலைபேசி எண் | | | |
| மின்னஞ்சல் | | | |
| கடவு சீட்டு அளவு புகைப்படம் | | | |
| கையொப்பம் (தேதியுடன்) | | | |

கல்லூரியின் பெயர் :

கல்வி நிறுவனத்தின் மின்னஞ்சல் :

பேராசிரியர் (பொ) பெயர் :

பேராசிரியரின் (பொ) அலைபேசி எண் :

பேராசிரியர்(பொ)
கையொப்பம்

முதல்வரின் கையொப்பம்
முத்திரையுடன்

**இணையதள இணைப்புகள்:**

**கூகுள் படிவம்**

https://forms.gle/S1krv7KYShB2DuUw5

**புலனம்**

https://chat.whatsapp.com/EKxmID1YyGm60aq3wiCMme

**பதிவுப் படிவங்கள்**

https://drive.google.com/file/d/1EcGfRK8YdbZ3zflqn-xbR32Xy28rYoDv/view?usp=sharing

குறிப்பு: தட்டச்சு செய்யப்பட்ட வாதுரையினை (மென்நகல்) கீழ்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு **05 பிப்ரவரி 2024 க்கு முன்பாக** அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மின்னஞ்சல் முகவரி: tamilmoottheni@gmail.com**

**மாதிரி நீதிமன்ற குழு:**

1. முனைவர். ப. சண்முகப்பிரியா - முதல்வர்
2. திரு. ஜா. பிரவீன் - உதவிப்பேராசிரியர்
3. முனைவர். பா. சிவபிரசாத் - உதவிப்பேராசிரியர்
4. திருமதி. அ. சுதா - உதவிப்பேராசிரியர்

**தங்குமிடத்திற்கான ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அவர்களது அலைபேசி எண்கள்:**

**மாணவர்கள்:**

**திரு. K. சுரேஷ் – 9092394212**

**திரு. M. சுரேஷ் – 9626751509**

**மாணவிகள்:**

**செல்வி. S. புவனேஸ்வரி – 9150814653**

**செல்வி. C. சத்யா – 9500712867**

**மாதிரி நீதிமன்ற ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அவர்களது அலைபேசி எண்கள்:**

1. திரு. ஜா. பிரவீன் - உதவிப்பேராசிரியர் - +91 7200002333
2. முனைவர். பா. சிவபிரசாத் - உதவிப்பேராசிரியர் - +91 9443847951
3. திருமதி. அ. சுதா - உதவிப்பேராசிரியர் - +91 9384391955

**தொடர்பு முகவரி:**


முதல்வர்,

அரசு சட்டக் கல்லூரி,

தப்புக்குண்டு, தாடிச்சேரி - அஞ்சல்

தேனி – 625534.

தொலைபேசி: 04546 - 294363

மின்னஞ்சல் – govtlawcollegetheni@gmail.com

வலைதளம்: - https://glctheni.ac.in/